தேர்வு நாள்: 10.04.2022 | TEST - 11 | நேரம்: 180 நிமிடங்கள்

**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement - 20 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்றழைத்தவர்?

A) கமில் சுவலபில் B) ஹோக்கன்

C) ஹீராஸ் பாதிரியார் D) எஃப்.டபுல்யூ எல்லீஸ்

2) காவடிச் சிந்தை இயற்றியவர் யார்?

A) அருணகிரிநாதர் B) நா.வானமாமலை

C) புலவர் செ.இராசு D) சென்னிகுளம் அண்ணாமலையார்

3) பின்வருவனவற்றுள் அண்ணாமலையாரின் நூல்களில் சேராதது எது?

A) வீரைத் தலபுராணம் B) வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம்

C) கோமதி அந்தாதி D) திருக்கைலாயஞான உலா

4) "உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் / அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத் / தமிழ்யர் உண்டாலும் இலரே; முனிவிலர்!" எனத்துவங்கும் பாடலை இயற்றியவர்?

A) அணிலாடு முன்றிலார் B) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

C) ஒக்கூர் மாசாத்தனார் D) ஐயூர் மூலங்கிழார்

5) பொருந்தாத இணை எது?

A) இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன்

B) நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆநின்று

C) எதிர்கால இடைநிலைகள் - ழ், ள்

D) எதிர்மறை இடைநிலைகள் - ஆ, அல், இல்

6) ஆசிரியராக்கினார் - இதன் பகுதி என்ன?

A) ஆசு B) ஆசிரி C) ஆசிரியராக்கு D) ஆசி

7) யாருடைய வாழ்க்கை உள்ளதுபோலத் தோன்றிக் கெடும் என்கிறார் வள்ளுவர்?

A) அறமறிந்து வாழாதான் B) மறமறிந்து வாழாதான்

C) அறிவறிந்து வாழாதான் D) அளவறிந்து வாழாதான்

8) மூளையின் பசி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) குருதிப்பசி B) உயிர்வளிப்பசி

C) கார்பன் பசி D) நுண்பொருள் பசி

9) அறிவியல் உலகில், தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்ற உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியவர்?

A) ஆரியபட்டர் B) மெண்டலீஃப்

C) கிரிகோரி மெண்டல் D) ஜகதீச சந்திரபோஸ்

10) அரும்பிணி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகை B) பண்புத்தொகை C) உவமைத்தொகை D) உம்மைத்தொகை

**11)** கொளல் - இலக்கணக்குறிப்பு தருக:

A) பண்புத்தொகை B) தொழிற்பெயர் C) வினைமுற்று D) வினையெச்சம்

**12)** ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்றான நீலகேசி எப்பாவால் ஆனது?

A) கலிப்பா B) ஆசிரியப்பா C) விருத்தப்பா D) வஞ்சிப்பா

**13)** நீலகேசி, எந்தக் காப்பியத்திற்கு மறுப்பாக எழுதப்பட்டது?

A) குண்டலகேசி B) வளையாபதி

C) சூளாமணி D) உதயனகுமார காவியம்

**14)** சூழ்ந்த, புகுந்த - இலக்கணக்குறிப்பு அறிக.

A) தொழிற்பெயர்கள் B) ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

C) வினையெச்சங்கள் D) பெயரெச்சங்கள்

**15)** மீரா பற்றிய தவறான கூற்றைத் தேர்க.

A) விஞ்ஞானி என்பது மீராவின் கவியரங்கக் கவிதை B) அன்னம் விடு தூது இதழ் நடத்தியவர்

C) ஊசிகள் என்பது மீராவின் கவிதை நூல் D) எழுத்து என்னும் இதழின் ஆசிரியர்

**16)** பாய்கதிர் - இலக்கணக்குறிப்பு தருக

A) பண்புத்தொகை B) எண்ணும்மை C) வினைத்தொகை D) வினையெச்சம்

**17)** "மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக்கொள்கின்றன." - என்ற கூற்றைச் சொன்னவர் யார்?

A) எர்னஸ்ட் காசிரர் B) வால்ட் விட்மன் C) ஆற்றூர் ரவிவர்மா D) மல்லார்மே

**18)** 2001இல் கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைகள் மொத்தமாக எத்தலைப்பில் தொகுக்கப்பட்டன?

A) உரிகொல்லும் வார்த்தைகள் B) உயிர்த்தெழும் காலத்துக்காக

C) நறுக்குகள் D) தோற்றுப்போனவர்களின் பாடல்

**19)** தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை. - என்னும் கூற்று யாருடையது?

A) இரசூல் கம்சதேவ் B) மார்க்சிமர் C) வால்ட் விட்மன் D) பாப்லோ நெரூதா

**20)** எந்த சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடுகிறது?

A) இருங்கோ வேள் B) ஈந்தூர் கிழான் தோயன்மாறன்

C) சீயகங்கன் D) எழினியாதன்

**21)** தவறான இணை எது?

A) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் B) கடல் + அலை - உயிர் + மெய்

C) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் D) மண் + வளம் - மெய் + மெய்

ETW ACADEMY

22) தமிழ் இலக்கிய வரலாற்றில் "புலமைக் கதிரவன்" எனத் தமிழறிஞர்கள் போற்றிய பெரும்புலவர் யார்?

A) பலபட்டைச் சொக்கநாதபுலவர்
B) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
C) உ.வே. சாமிநாதர்
D) தேவநேயப்பாவாணர்

23) "நேரடிமொழி எனப்படும் பெச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டும் இருக்கிறது" என்றவர் யார்?

A) மலையாளக் கவிஞர் சச்சிதானந்தன்
B) மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா
C) மலையாள எழுத்தாளர் வைக்கம் முகமது பஷீர்
D) மலையாள எழுத்தாளர் தேவதச்சன்

24) புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?

A) மல்லார்மே
B) டி.எஸ். எலியட்
C) வால்ட் விட்மன்
D) பாப்லோ நெரூடா

25) 'தமிழின் கவிதையியல்' என்னும் நூலாசிரியர் யார்?

A) கா. சிவத்தம்பி
B) கைலாசபதி
C) ராஜமார்த்தாண்டன்
D) இந்திரன்

26) உழப்படாத நிலம், இராசயன உரம் இல்லாத உற்பத்தி, பூச்சுக்கொல்லி தெளிக்கப்படாத பயர் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இலாத உயர் விளைச்சல் ஆகிய ஐந்து விவாசாய மந்திரங்களை உலகுக்களித்தவர்?

A) நம்மாழ்வார்
B) மசானபு ஃபுகோகா
C) எம்.எஸ்.சுவாமிநாதன்
D) ஜே.சி. குமரப்பா

27) ஏதிலி - என்பதன் பொருள் என்ன?

A) எல்லாம் உடைய
B) மாற்றம்
C) காலக்கடிகாரம்
D) அகதி

28) கவிஞர் அழகிய பெரியவனின் இயற்பெயர் யாது?

A) பசுவய்யா
B) சிவராமலிங்கம்
C) அரங்கநாதன்
D) அரவிந்தன்

29) அழகியப் பெரியவன் எவ்வூரைச் சேர்ந்தவர்?

A) பேரணாம்பட்டு, வேலூர்
B) வில்லியனூர், புதுச்சேரி
C) மோகனூர், நாமக்கல்
D) பெரியகுளம், தேனி

30) பள்ளு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) வாயில் இலக்கியம்
B) சந்து இலக்கியம்
C) அகப்பொருள் கோவை
D) உழத்திப்பாட்டு

31) திருமலை முருகன் பள்ளு வேறு எவ்வாறு அழைக்கப்ப்டுவதில்லை?

A) திருமலை உடையான் பள்ளு
B) பள்ளிசை
C) திருமலை அதிபர் பள்ளு
D) மேற்கண்ட எதுவுமில்லை

32) திருமலை முருகன் பள்ளு என்ற நூலின் ஆசிரியரான பெரியவன் கவிராயர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

A) 17ஆம் நூற்றாண்டு
B) 15ஆம் நூற்றாண்டு
C) 18ஆம் நூற்றாண்டு
D) 19ஆம் நூற்றாண்டு

ETW ACADEMY

33) காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல் / யாழ்வரைத் தங்கி யாங்கு. - என்னும் நூல் யாது?

A) திருக்குறள் B) நாலடியார் C) புறநானூறு D) கலித்தொகை

34) யானை டாக்டர் என்று அழைக்கப்பட்டவர்?

A) மரு. எஸ். சபாபதி B) திருத்தளிகை நாதன்
C) வி. கிருஷ்ணமூர்த்தி D) காசி. பிச்சை

35) ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய எந்நூல் அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரமாகப் போற்றப்படுகிறது?

A) கருணாமிர்த சாகரம் B) பூர்வீக சங்கீத உண்மை
C) இந்திரகாளியம் D) பரதசேனாபதியம்

36) "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" எனக் கடவுளையும் மலையையும் தொடர்புப்படுத்தும் நூல்?

A) முல்லைப்பாட்டு B) மலைபடுகடாம் C) திருமுருகாற்றுப்படை D) குறிஞ்சிப்பாட்டு

37) வரை - என்ற சொல்லின் பொருள்களில் சேராதது?

A) கோடு, மலை B) சிகரம், விளிம்பு C) கரை, எல்லை, நுனி D) அரணி, தில்லம்

38) காவடிச்சிந்தின் தந்தை யார்?

A) அண்ணாமலையார் B) பாரதியார் C) அருணகிரிநாதர் D) சுந்தரர்

39) குறுந்தொகையை தொகுத்தவர்.

A) பூரிக்கோ B) உப்புரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மன்
C) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் D) தெரியவில்லை

40) புறநானூறு தவிர வேறு எத்தொகுப்பிலும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ஒரு பாடலை பாடியுள்ளார்?

A) குறுந்தொகை B) பரிபாடல் C) ஐங்குறுநூறு D) நற்றிணை

41) சி.சு. செல்லப்பா உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்?

1. சந்திரோதயம் 2. மணிக்கொடி 3. தினமணி

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

42) "உங்கள் உடலின் முக்கியப்பணி, உங்கள் மூளையைத் தாங்கிச் செல்வது" என்றவர்?

A) ஆல்பர்ட் ஐன்ஸ்டின் B) பியர் பால் ப்ராக்கா
C) ஆட்டோ டியட்டர்ஸ் D) தாமஸ் ஆல்வா எடிசன்

43) 1874இல் மூளையில் வார்த்தைகள் அறியப்படும் இடத்தைக் கணறிந்தவர்?

A) ஆட்டோ டியட்டர்ஸ் B) டெஸ்கார்ட்டெஸ் C) வெர்னிக் D) நோம் சோம்ஸ்கி

44) நீலகேசிக்கு உரை இயற்றியவர்?

A) திருக்கையிலாய அகத்திய முனிவர் B) பொதிகை குற்றால முனிவர்
C) சமய திவாகர வாமன முனிவர் D) யாரென்று அறியப்படவில்லை

ETW ACADEMY

**45)** செலவு - என்பதன் பொருள்?

A) பணம் B) பொருள் C) வழி D) நாடு

**46)** "இ ஈ ஐவழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும் / உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்" என்ற பாடல் இடம்பெறும் நூல்?

A) அமுதசாகரம்
B) தொல்காப்பியம்
C) நன்னூல்
D) யாப்பெருங்கலக்காரியை

**47)** நிலைமொழியின் இறுதி எழுத்து "ஏ" என்ற உயிரெழுத்தாக இருந்தால் தோன்றும் உடம்படு மெய்?

A) ய் B) வ் C) ழ் D) ய் அல்லது வ்

**48)** அறிவியல் தமிழர் என்று போற்றப்படுபவர் யார்?

A) நெல்லை சு. முத்து B) பெ. நா. அப்புசாமி C) அப்துல் கலாம் D) சிவன்

**49)** தமிழில் வந்த முதல் அறிவியல் இதழ்?

A) ஒரு பைசா தமிழன்
B) அறிவியல் தமிழன்
C) தமிழர் நேசன்
D) தமிழர் அறிவியல்

**50)** 2011இல் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற இந்திரனின் மொழிபெயர்ப்பு நூல் எது?

A) பருவம்
B) புரட்சிக்காரன்
C) பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்
D) லடாக்கிலிருந்து கவிழும் நிழல்

**51)** இவற்றுள் இந்திரன் நடத்திய இதழ்கள் எவை?

1. தேசபக்தன்
2. நவசக்தி
3. வெளிச்சம்
4. நுண்கலை
5.ஞானசாகரம்

A) 1, 3 & 4 B) 2, 3 & 5 C) 3 & 4 D) 4 & 5

**52)** "ஐந்தும்" என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு தருக:

A) எண்ணும்மை B) உம்மைத்தொகை C) உவமைத்தொகை D) முற்றும்மை

**53)** நன்னூல் எத்தனை அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது?

A) 2 B) 3 C) 4 D) 5

**54)** திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார், அவர் எங்கு பிறந்தவர்?

A) ஹீராஸ் பாதிரியார், லண்டன்
B) ஜி.யு. போப், கனடா
C) தத்துவபோதகர், பிரிட்டன்
D) வீரமாமுனிவர், பிரிட்டன்

ETW ACADEMY

**55)** அ.முத்துலிங்கம் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்புகளில் சேராதது?

A) அக்கா B) மகாராஜாவின் ரயில் வண்டி

C) ஆறாம் திணை D) திகடசக்கரம்

**56)** பொருத்தமானவற்றைத் தேர்க

1. அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
2. பவணந்தி முனிவர் - நன்னூல்
3. சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை
4. இந்திரன் - பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

A) 1, 2 B) 1, 4 C) 2, 4 D) 1, 3

**57)** பாயிரம் இல்லது ______ அன்றே

A) காவியம் B) பனுவல் C) பாடல் D) கவிதை

**58)** 2003 ஆம் ஆண்டு தமிழக அரசு விருதுபெற்ற அழகிய பெரியவனின் புதினம் எது?

A) தகப்பன் கொடி B) முக்கூடல் C) தேன்மழை D) வாய்க்கால் மீன்கள்

**59)** அழகிய பெரியவனின் கவிதைத் தொகுப்பு அல்லாதது எது?

A) காந்தள் நாட்கள் B) உணக்கும் எனக்குமான சொல்

C) ஞாபக விலங்கு D) அரூப நெஞ்சு

**60)** திருமலை முருகன் பள்ளு - என்ற சிற்றிலக்கியத்தை இயற்றியவர்?

A) பெரியவன் கவிராயர் B) குமரகுருபரர்

C) தாயுமானவர் D) பலபட்டைச் சொக்கநாதப் புலவர்

**61)** ஆரளி - பொருள் தருக.

A) மணம்தரும் மலர் B) மொய்க்கின்ற வண்டு

C) மணம்தரும் காற்று D) மொய்க்கின்ற தேனீ

**62)** ஐங்குறுநூறு எந்தப் பா வகையால் ஆனது?

A) வென்பா B) கலிப்பா C) அகவற்பா D) வஞ்சிப்பா

**63)** கடவுள் வாழ்த்து நீங்கலாக ஐங்குறுநூறில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?

A) 400 B) 401 C) 500 D) 501

**64)** ஐங்குறுநூறு பாடிய புலவர்களைப் பொருத்துக:

1. குறிஞ்சி - அ) ஓரம்போகியார்
2. முல்லை - ஆ) கபிலர்
3. மருதம் - இ) பேயனார்
4. நெய்தல் - ஈ) ஓதலாந்தையார்
5. பாலை - உ) அம்மூவனார்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ

C) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-இ D) 1-உ, 2-இ, 3-ஈ, 4-ஆ, 5-அ

ETW ACADEMY

**65)** பழந்தமிழர் அடையாளமாக விளங்கும் கொற்கை, முசிறி, தொண்டி (KVT COMPLEX) ஆகியவை குறிப்பிடப்படாதது எதில்?

A) அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளில் B) அயல்நாட்டு ஆவணங்களில்
C) அயல்நாட்டின் ஊர்ப்பெயர்களில் D) வடமொழி இலக்கியங்களில்

**66)** திராவிடவியல் ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் நூல்களில் சேராதது எது?

A) அன்புள்ள அம்மா B) சிறகுக்குள் வானம்
C) சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம் D) சிந்துவெளி எழுத்துகள்

**67)** பொருந்தாத பொருள் எது?

A) ஜகம் - உலகம் B) புயம் - தேகம் C) வரை - மலை D) வன்னம் - அழகு

**68)** சுஜாதாவின் அறிவியல் நூல்களில் சேராதது?

A) கணிப்பொறியின் கதை B) சிலிக்கன் சில்லுப்புரட்சி
C) என் இனிய இயந்திரா D) ஐன்ஸ்டைனும் அண்டவெளியும்

**69)** பின்வருவனவற்றுள் கவிஞர் மீரா நடத்திய இதழ் அல்லாதது எது?

A) கவி B) குக்கூ
C) அன்னம் விடு தூது D) மேற்கண்ட எதுவுமில்லை

**70)** சிட்டி என்ற சுந்தர்ரஜனும் சோமு என்ற மீ.ப.சோமசுந்தரமும் நடத்திய கவியரங்கத்தை "எழில்" என்று தலைப்பிட்டு தமிழ்ப் புத்தாண்டு நாளை ஒட்டி, 13.04.1944 அன்று ஒலிபரப்பிய வானொலி நிலையம் எது?

A) கொழும்பு வானொலி நிலையம் B) திருச்சி வானொலி நிலையம்
C) இலங்கை வானொலி நிலையம் D) ஆல் இந்தியா வானொலி நிலையம்

**71)** "ஆக்கியோன் பெயரே வழியே எல்லை / நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே / கேட்போர் பயனோடு ஆயஎண் பொருளும் / வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே" என்று எடுத்தியம்பும் நூல் எது?

A) தொல்காப்பியம் B) அமுதசாகரம் C) யாப்பெருங்கலம் D) நன்னூல்

**72)** மாநகர் - இலக்கணக்குறிப்பு தருக.

A) முற்றும்மை B) வினையாலணையும் பெயர்
C) தொழிற்பெயர் D) உரிச்சொற்றொடர்

**73)** காட்டல், கோடல் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு தருக.

A) பண்புப்பெயர் B) வினையாலணையும் பெயர்
C) தொழிற்பெயர் D) வியங்கோள் வினைமுற்று

**74)** கேட்போர் - இலக்கணகுறிப்பு தருக.

A) வினைமுற்று B) வினையாலணையும் பெயர்
C) தொழிற்பெயர் D) வினையெச்சம்

ETW ACADEMY

**75)** ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் உள்ள எந்தக் கோவிலில் பவனந்திமுனிவரின் உருவச் சிற்பம் உள்ளது?

A) புஷ்பதந்தர் B) சீதளநாதர் C) சம்பவநாதர் D) சந்திரபிரபா

**76)** தரளம் - என்றால் என்ன?

A) முத்து B) சங்கு C) மாலை D) பந்தல்

**77)** செங்கயல், வெண்சங்கு - இலக்கணக்குறிப்பு தருக.

A) எண்ணும்மைகள் B) வினைத்தொகைகள்
C) உம்மைத்தொகை D) பண்புத்தொகைகள்

**78)** கொன்றைசூடு - இலக்கணக்குறிப்பு தருக

A) இரண்டாம் வேற்றுமைத்தொகை B) மூன்றாம் வேற்றுமைத் தொகை
C) ஐந்தாம் வேற்றுமைத் தொகை D) நான்காம் வேற்றுமைத் தொகை

**79)** ஐங்குறுநூறின் அடிவரையறை என்ன?

A) 9 அடி சிற்றெல்லை 12 அடி பேரெல்லை B) 4 அடி சிற்றெல்லை 8 அடி பெரெல்லை
C) 3 அடி சிற்றெல்லை 6 அடி பெரெல்லை D) 13 அடி சிற்றெல்லை 31 அடி பேரெல்லை

**80)** சங்கக் காலப் புலவரான பேயனார் இயற்றிய எத்தனைப் பாடல்கள் கிடைத்துள்ளன

A) 101 B) 103 C) 105 D) 108

**81)** ஜெயமோகனோடு தொடர்பில்லாத புதினம்?

A) விஷ்ணுபுரம் B) கொற்றவை C) நெடுங்குருதி D) காடு

**82)** மாதே - இலக்கணக்குறிப்பு அறிக

A) பெயரெச்சம் B) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
C) விளி D) வினையெச்சம்

**83)** திரு + புகழ் = திருப்புகழ் என்றப் புணர்ச்சி எவ்விதிப்படி நிகழ்ந்தது?

A) இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்
B) உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்
C) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
D) மேற்கண்ட அனைத்தும்

**84)** எந்நூல் தந்த தாக்கத்தால் காவடிச் சிந்து என்ற சிறந்த சந்த இலக்கியம் தோன்றியது?

A) திருமந்திரம் B) திருக்கருவை அந்தாதி
C) கருவை மும்மணிக்கோவை D) திருப்புகழ்

**85)** "அம்ம வாழி தோழி நம்மூர்ப் / பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ...." என்றப் பாடல் இடம்பெறும் நூல்?

A) நற்றிணை B) குறுந்தொகை C) பரிபாடல் D) ஐங்குறுநூறு

ETW ACADEMY

86) பிரிந்தோர் - இலக்கணக்குறிப்பு வரைக

A) இறந்தகால படர்க்கை வினைமுற்று B) முற்றச்சம்
C) வினையெச்சம் D) வினையாலனையும் பெயர்

87) குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள பாடல்களின் எண்ணிக்கை?

A) 400 B) 500 C) 401 D) 399

88) நீலகேசி, தமிழில் எழுதப்பட்ட முதலாவது ______ நூலாகும்.

A) காப்பிய நூல் B) அகவற்பா நூல்
C) தருக்க நூல் D) சிற்றிலக்கிய நூல்

89) நீலகேசியில் கடவுள் வாழ்த்து உட்பட 11 பகுதிகளிலும் சேர்த்து மொத்தமாக எத்தனைப் பாடல்கள் உள்ளன?

A) 894 B) 890 C) 880 D) 860

90) கடலில் கலம் செலுத்திப் பொருள் ஈட்டி வரும் வழியில் சிந்தும் பொருட்களை கண்டுகொள்ளாது விட்டுவிடும் அளவிற்கு வளங்கொண்ட மன்னன் யாரென்று புறநானூற்றில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடுகிறார்?

A) கரிகால் சோழப் பெருவளத்தான் B) போரவை நற்கிள்ளி
C) குலோத்துங்கன் D) நலங்கிள்ளி

91) செஞ்ஞாயிறு, பெருங்கலம், பெருவழி - இலக்கணக்குறிப்பு தருக.

A) வினைத்தொகைகள் B) பெயரெச்சங்கள்
C) பண்புத்தொகைகள் D) உம்மைத்தொகைகள்

92) உடம்படுமெய்யாக வரும் மெய்கள் எவை?

A) க்,ங் B) த்,ந் C) ய்,வ் D) ள்,ற்

93) சினம் கொண்ட அரசனின் கொடுமை தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரை விட்டு ஓடியவர்களின் கதையை, "வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி..." என்று கூறும் நூல் எது?

A) குறுந்தொகை B) பரிபாடல் C) கலித்தொகை D) நற்றிணை

94) நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது ........................... எனப்படும்.

A) உயிரீறு B) மெய்யீறு C) உயிர்முதல் D) மெய்முதல்

95) “கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்” – அடிமோனையை தெரிவு செய்க

A) கபாடபுரங்களை – காவுகொண்ட B) காலத்தால் – கனிமங்கள்
C) கபாடபுரங்களை – காலத்தால் D) காலத்தால் – சாகாத

96) வாய்க்கால் என்ற சொல்லின் மெய்ம்மயக்க வகை?

A) உடனிலை மெய்ம்மயக்கம் B) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
C) ஈரொற்று மெய்ம்மயக்கம் D) மேற்கண்ட ஏதுமில்லை

**97)** வாழ்க என்ற சொல்லின் மெய்ம்மயக்க வகை?

A) உடனிலை மெய்ம்மயக்கம் B) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

C) ஈரொற்று மெய்ம்மயக்கம் D) மேற்கண்ட ஏதுமில்லை

**98)** குறுந்தொகை இலக்கியத்தோடு பொருந்தாதது எது?

A) உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்.

B) இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட சங்க நூலாகக் கருதப்படுகிறது

C) அகத்திணை சார்ந்த 400 பாடல்களைக் கொண்ட நூல்

D) கடவுள் வாழ்த்து பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்

**99)** "துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப் / புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின் / உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்; / அன்ன மாட்சி அனையர் ஆகித் / தமக்கென முயலா நோன்தாள் / பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" என்ற அடிகள் இடம்பெறும் நூல்?

A) குறுந்தொகை B) ஐங்குறுநூறு C) புறநானூறு D) பதிற்றுப்பத்து

**100)** முயலா - இலக்கணக்குறிப்பு தருக

A) எதிர்மறைப் பெயரெச்சம் B) வினையாலனையும் பெயர்

C) எதிர்மறை வினையெச்சம் D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**101)** புறநானூற்றை முழுமையாக "The Four Hundred Songs of War & Wisdom - An Anthology of Poems from Classical Tamil, the Purananuru" என்றத் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தவர் யார்?

A) ஜி.யு.போப் B) கான்ஸ்டடைன் ஜோசப் பெஸ்கி

C) பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் D) டாக்டர் கிரௌல்

**102)** Secularism என்ற பதத்தை உருவாக்கிய ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளர் யார்?

A) ஜார்ஜ் ஜேக்கப் B) வில்லியம் ஹாக்கிங் C) சர் தாமஸ் ரோ D) ஏ.வி.டைசி

**103)** சமயசார்பின்மை என்பது அரசைப் பொருத்தவரை?

A) பெரும்பான்மை சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காதிருத்தல்

B) அனைத்து மத வழிபாடுகளையும் தடை செய்தல்

C) அனைத்து சமயங்களையும் புறக்கணித்தல்

D) அனைத்து சமயங்களையும் நடுநிலைத்தன்மையோடு அரவணைத்தல்

**104)** ”சமயம் நமக்குப் பகைமையைப் போதிக்கவில்லை; நாம் அனைவரும் இந்தியர்கள் மற்றும் இந்தியா நமது வீடு” என்ற வரிகளை இயற்றியவர் யார்?

A) கவிஞர் இன்குலாப்

B) கவிஞர் இக்பால்

C) ரவீந்திரநாத் தாகூர்

D) பங்கிம் சந்திர ஸ்ட்டர்ஜி

ETW ACADEMY

**105)** அசோகர் தனது எந்த அரசாணையில், அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்பு தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக்கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்?

A) 8வது பாறை அரசாணை B) 10வது பாறை அரசாணை
C) 12வது பாறை அரசாணை D) 7வது பாறை அரசாணை

**106)** மதசகிப்புத் தன்மையைப் பின்பற்றிய முகலாய மாமன்னர்?

A) ஔரங்கசீப் B) ஹுமாயூன் C) ஷாஜகான் D) அக்பர்

**107)** சமயசார்பற்ற என்னும் சொல் அரசியலமைப்பின் முகவுரையில் எத்தனையாவது சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது மற்றும் சேர்க்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 42, 1976 B) 40, 1972 C) 44, 1978 D) 46, 1980

**108)** பொருந்தாதது எது?

A) பாகுபாடுத் தடை - சட்டப்பிரிவு 15 B) சம வாய்ப்பு - சட்டப்பிரிவு - 16
C) சமயத்தை பின்பற்றும் உரிமை - சட்டப்பிரிவு 25(1) D) மேற்கண்ட எதுவுமில்லை

**109)** "என்னை எங்கே தேடுகிறீர்கள் / நான் உன்னுடன் இருக்கிறேன் / புனித யாத்திரையிலோ சின்னங்களிலோ அல்ல / தனிமையிலும் இல்லை / கோயில்களிலோ மசூதிகளிலோ அல்ல / காபாவிலோ அல்லது கைலாசத்திலோ அல்ல / நான் உன்னுடன் இருக்கிறேன். ஓ! மனிதனே நான் உன்னுடன் இருக்கிறேன்" என்றக் கவிதையைப் படைத்தவர் யார்?

A) கலீல் கீப்ரான் B) உமர் கய்யாம் C) கபீர் D) தாராஷூகோ

**110)** "சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுவதும் ஆகும்." - எனக்கூறியவர் யார்?

A) பேராசிரியர் லாஸ்கி B) ஏ.வி.டைசி C) வீ.ஏ.ஸ்மித் D) அம்பேத்கார்

**111)** 2017ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் பாலின சமத்துவம் என்பது எத்தனையாவது குறிக்கோளாக குறிப்பிடப்பட்டுள்ளது?

A) ஐந்தாவதாக B) நான்காவதாக C) மூன்றாவதாக D) ஏழாவதாக

**112)** பின்வரும் கூற்றையும் காரணத்தையும் ஆராய்ந்து சரியான விடையைத் தேர்க:

**கூற்று:** இந்தியா ஒரு துணைக் கண்டம் ஆகும்.

**காரணம்:** ஒரு கண்டத்தில் காணப்படக்கூடிய எல்லா கூறுகளையும் ஒரு நாடு கொண்டிருந்தால் அந்நாடு கண்ட நாடு என்றழைக்கப்படும்

A) கூற்றும் காரணமும் சரி; மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்
B) கூற்று சரி; காரணம் தவறு
C) கூற்று தவறு; காரணம் சரி
D) கூற்றும் காரணமும் தவறு

ETW ACADEMY

**113)** இந்தியாவில் அதிக மழைபொழியும் இடமான மௌசின்ராம் எம்மாநிலத்தில் உள்ளது?

A) மேகாலயா B) சிக்கிம் C) ராஜஸ்தான் D) மணிப்பூர்

**114)** பின்வரும் எது இந்தியாவில் உள்ள நான்கு மொழிக்குடும்பங்களில் சேராதது?

A) இந்தோ-ஆரியன் B) திராவிடன்
C) ஆஸ்ட்ரோஆஸ்டிக் D) நேபாள் திபெத்தியன்

**115)** இந்தியாவிற்கு வணிகம் செய்வதற்காக வந்தவர்களின் சரியான வரிசை?

1. டச்சுக்காரர்கள்
2. போர்த்துகீசியர்கள்
3. டேனியர்கள்
4. ஆங்கிலேயர்கள்
5. பிரெஞ்சுக்காரர்கள்

A) 2 - 1 - 3 - 4 - 5 B) 1 - 2 - 4 - 3 - 5 C) 2 - 1 - 4 - 3 - 5 D) 1 - 2 - 3 - 4 - 5

**116)** இந்திய அரசால் முதல் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழி & ஆண்டு?

A) சமஸ்கிருதம், 2000 B) தெலுங்கு, 2002 C) தமிழ், 2004 D) அஸ்ஸாமி, 2003

**117)** சத்ரியா, பிஹூ ஆகிய நடனங்கள் எங்கு ஆடப்படுகின்றன?

A) ஜம்மு & காஷ்மீர் B) ஒடிசா C) குஜராத் D) அஸ்ஸாம்

**118)** பொருந்தாதது?

A) கர்நாடகா - யக்ஷகானம் B) ஆந்திரா - ராசலீலா
C) ஜம்மு காஷ்மீர் - தும்ஹல் D) குஜராத் - கார்பா

**119)** இந்தியாவில் பல்வேறு இன மக்கள் காணப்படுவதால், இந்தியாவை "இனங்களின் அருங்காட்சியகம்" என்றவர்?

A) வி.ஏ.ஸ்மித் B) அகத்தியலிங்கம்
C) ஏ.வி.டைசி D) ராமச்சந்திர குஹா

**120)** இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" உள்ள நாடாக விளங்குகிறது என்ற சொற்றொடர், முதன் முதலில் இடம்பெற்ற நூல் எது?

A) டிஸ்கவரி ஆ. ்ப் இந்தியா B) ஆனந்த மடம்
C) கீதாஞ்சலி D) லெட்டர்ஸ் டு இந்திரா

**121)** தென்னாப்பிரிக்காவிலிருந்த இனவெறிக்கு முடிவுகட்ட, நெல்சன் மண்டேலா எத்தனை வருடங்கள் சிறையிலிருந்தார் மற்றும் அவர் விடுதலையான ஆண்டு என்ன?

A) 24, 1990 B) 27, 1994 C) 24, 1994 D) 27, 1990

**122)** பாபா சாஹேப் அம்பேத்கார் ஆற்றிய பங்களிப்புகளில் சேராதது?

A) பொருளாதர நிபுணர் B) முதல் பொருளாதார (நிதி) அமைச்சர்
C) சமூக சீர்திருத்தவாதி D) மேற்கண்ட எதுவுமில்லை

**123)** எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம் சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எப்பிரிவு அறிவுறுத்துகிறது?

A) 14 (1) B) 17 (1) C) 16 (1) D) 15 (1)

**124)** இந்திய அரசியலமைப்பின் தந்தையாக அம்பேத்கார் அழைக்கப்படுவதன் காரணம் அவர் இந்திய அரசியலமைப்பின் ______

A) நிர்ணயசபை தலைவராக இருந்ததால்

B) நிர்ணயசபை முதல் கூட்டத்திற்கு தலைமை தாங்கியதால்

C) வரைவுக்குழுவின் தலைவராக இருந்ததால் D) வரைவுக்குழுவை அமைத்ததால்

**125)** 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, குறைவான எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டம் எது?

A) தர்மபுரி B) விழுப்புரம் C) கிருஷ்ணகிரி D) அரியலூர்

**126)** அரசியலமைப்பின் எப்பிரிவின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டது?

A) 14 B) 15 C) 17 D) 19

**127)** தமிழ்நாட்டில் மயில்களுக்கான சரணாலயம் எங்கு உள்ளது?

A) முதுமலை, நீலகிரி மாவட்டம் B) சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்

C) விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம் D) வேடந்தாங்கல், காஞ்சிபுரம் மாவட்டம்

**128)** இந்தியாவிற்குள் பாயும் நீளத்தின் அடிப்படையில் இந்தியாவின் நீளமான நதி எது?

A) கங்கை B) சிந்து C) பிரம்மபுத்திரா D) பவானி

**129)** பொருந்தாதது?

A) ஆலமரம் - 1950 B) தாமரை – 1952 C) மயில் - 1963 D) ஆற்று ஓங்கில் - 2010

**130)** இந்தியாவின் தேசிய நுண்ணுயிரி எது?

A) பிளவி B) டி4 பாக்டீரியாபேஜ்

C) சால்மோனெல்லா டைபி D) லாக்டோ பேசில்லஸ்

**131)** இந்திய தேசிய கொடியின் நீள அகலம் எந்த விகிதத்தில் இருக்க வேண்டும்?

A) 5:3 B) 4:2 C) 3:2 D) 3:1

**132)** சுதந்திர இந்தியாவின் முதல் தேசியக்கொடி எங்கு நெய்யப்பட்டது?

A) வேலூர், குடியாத்தம் B) குமாரபாளையம், ஈரோடு

C) கரூர், பரமத்தி வேலூர் D) இளையாம்பாளையம், நாமக்கல்

**133)** சுதந்திர இந்தியாவின் முதல் தேசியக்கொடி தற்பொழுது எந்த அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது?

A) செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகம், சென்னை

B) செயிண்ட் பால்ஸ் அருங்காட்சியகம், தரங்கம்பாடி

C) செயிண்ட் வில்லியம்ஸ் அருங்காட்சியகம், கொல்கத்தா

D) மேற்கண்ட எதுவுமில்லை

ETW ACADEMY

**134)** காந்தியடிகள் கைதுக்கு எதிராக எந்த ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் திருப்பூர் குமரன் கலந்து கொண்டு காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்தறந்தார்?

A) 1930 B) 1931 C) 1932 D) 1933

**135)** நமது தேசிய இலட்சனையின் அடிப்பகுதியில் அமைந்துள்ள உருவங்களில் சேராதது?

A) மயில் B) யானை

C) குதிரை D) காளை & சிங்கம்

**136)** இந்தியா எனது தாய்நாடு எனத்தொடங்கும் நமது தேசிய உறுதிமொழியை பிதிமாரி வெங்கட சுப்பாராவ் என்பவர் எம்மொழியில் எழுதினார்?

A) இந்தி B) வங்காளம் C) சமஸ்கிருதம் D) தெலுங்கு

**137)** பிரிட்டானிய மொழியில் முறையே மென் என்றால் _____, ஹிர் என்றால் _____

A) நீளமான, கல் B) கல், நீளமான

C) கல், செங்குத்தான D) செங்குத்தான, கல்

**138)** இந்தியாவின் தேசிய குறிக்கோளான சத்யமேவ ஜெயதே - "வாய்மையே வெல்லும்" என்ற வாக்கியம் எதிலிருந்து எடுக்கப்பட்டது?

A) உபநிடதம் B) சுருதி C) ஸ்மிருதி D) ரிக் வேதம்

**139)** சபா, சமிதி, விதாதா, கணா ஆகிய அமைப்புகளில் மிகப்பழமையானது எது மேலும் பின்வேதகாலத்தில் இல்லாமல் போனது எது?

A) சபா B) சமிதி C) விதாதா D) கணா

**140)** ரிக் வேத கால மக்கள் தாமிரம் அதாவது செம்பை எவ்வாறு அழைத்தனர்?

A) நிஷ்கா B) ஹிரண்யா C) சியாமா D) அயாஸ்

**141)** ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் ஆறில் ஒரு பங்கை அரசுக்கு வரியாக செலுத்த வேண்டும் என்ற வரி எது?

A) ஹிரண்யா B) சர்தேஷ்முகி C) பாலி D) பாகா

**142)** வட இந்தியாவின் தொடக்ககால வேதப் பண்பாடு இந்திய துணைக்கண்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவிய எந்த பண்பாட்டோடு ஒத்துப் போகிறது?

A) பெருங்கற்கால பண்பாடு B) செம்புகால பண்பாடு

C) இரும்புகால பண்பாடு D) வெண்கலக் கால பண்பாடு

**143)** பெருங்கற்காலத்தில் ஒரு கூறாக உள்ள மண்பாண்டங்கள் எந் நிறத்தில் ஆனவை?

A) பழுப்பு & மஞ்சள் B) பழுப்பு & சிவப்பு C) கருப்பு & சிவப்பு D) கருப்பு & மஞ்சள்

**144)** தமிழ்நாட்டில் கற்திட்டைகள் காணப்படும் இடங்களில் சேராதது?

A) காஞ்சிபுரம் மாவட்டம் வீரராகவபுரம் B) திண்டுக்கல் மாவட்டம் கும்மாளமருதுபட்டி

C) மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டி D) திண்டுக்கல் மாவட்டம் புலிமான்கோம்பை

ETW ACADEMY

**145)** கர்மாவில் இருந்து விடுதலை பெறுவதற்கும் மோட்ச நிலையை அடைவதற்கும் மகாவீரர் அறிவுறுத்திய வழிகள் எத்தனை, அவை எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) 3, திரிபீடகங்கள் B) 8, எண்வழிகள் C) 3, திரிரத்தினங்கள் D) 5, நல்வழிகள்

**146)** கௌதமசுவாமி தொகுத்த மகாவீரரின் போதனைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) ஆகம சித்தாந்தம் B) திரிரத்தினம் C) அபரிகிரகா D) அஸ்தேயா

**147)** அறவோர் பள்ளி என்பது சமண துறவிகள் வாழ்ந்த இடங்கள் என எந்த காப்பியத்தில் குறிப்புகள் உள்ளன?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) குண்டலகேசி D) நீலகேசி

**148)** ஜெயினக் காஞ்சி என்று அழைக்கப்பட்ட கிராமம் எது?

A) உத்தமதானபுரம் B) உருத்திரமேரூர்
C) திருக்கழுக்குன்றம் D) திருப்பருத்திக்குன்றம்

**149)** புத்தர் ஆற்றிய முதல் முதல் உரை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) தர்மசக்கர பரிவர்த்தனா B) சத்யசக்கர பரிவர்த்தனா
C) தர்மசக்கர பரிபூரனா D) சத்யசக்கர பரிபூரனா

**150)** புத்தருடைய உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) சைத்தியம் B) விகாரை C) ஸ்தூபி D) பள்ளி

**151)** பௌத்தம் மற்றும் சமணம் ஆகிய இரண்டிற்கு இடையே உள்ள பொதுவான அம்சங்களில் சேராதது?

A) இரண்டும் வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தன B) இரண்டும் கர்மா என்ற கோட்பாட்டை ஏற்றன
C) இரண்டும் தீவிரமான துறவறத்தை பின்பற்றின D) இரண்டும் இரத்த பலிகளை எதிர்த்தன

**152)** ஆனந்தரங்கம் _____ வர்த்தகத்தில் துபாஷியாகப் பணியாற்றினார்?

A) ஆங்கில கிழக்கிந்திய B) பிரெஞ்சு C) டேனிஷ் D) போர்ச்சுகீசியர்

**153)** ஆசியாவில் உள்ள ஆவணக்காப்பகங்களிலேயே மிகவும் பெரியது எது?

A) கல்கத்தா தேசிய ஆவணக்காப்பகம் B) தமிழ்நாடு தேசிய ஆவணக்காப்பகம்
C) இந்திய தேசிய ஆவணக்காப்பகம் D) சீன தேசிய ஆவணக்காப்பகம்

**154)** கோழிக்கோடு வந்த வாஸ்கோவை வரவேற்ற மன்னர்?

A) சாமரின் B) இரண்டாம் ஜான் C) ஹென்றி D) அல்மெய்டா

**155)** இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர்?

A) வாஸ்கோடகாமா B) பிரான்சிஸ்கோ - டி - அல்மெய்டா
C) நினோ-டி-குன்கா D) அல்போன்சோ-டி-அல்புகர்க்

**156)** துவக்கத்தில் டச்சுக்காரர்களின் தலைநகராக விளங்கியது?

A) பழவேற்காடு B) நாகப்பட்டினம்
C) மசூலிப்பட்டினம் D) சூரத்

ETW ACADEMY

**157)** துவக்கத்தில் ஆங்கிலேயரின் தலைமையிடம்?

A) சென்னை B) புதுச்சேரி C) மசூலிப்பட்டினம் D) சூரத்

**158)** பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றவர் யார்?

A) நிக்கோலஸ் டவுண்டன் B) தாமஸ் பெஸ்ட்
C) சர் தாமஸ் ரோ D) வில்லியம் ஹாக்கின்ஸ்

**159)** இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் ____ நகரில் நிறுவினார்

A) பாண்டிச்சேரி B) சூரத் C) மசூலிப்பட்டினம் D) காரைக்கால்

**160)** போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்களால் முறியடிக்கப்பட்ட பின்னர் யாரால் வெளியேற்றப்பட்டனர்?

A) ஆங்கிலேயரால் B) பிரெஞ்சுக்காரர்களால் C) டேனியர்களால் D) முகலாயர்களால்

**161)** டேனியர்கள் டானஸ்பெர்க் என இந்தியாவின் எப்பகுதியை அழைத்தனர்?

A) நாகப்பட்டினம் B) சூரத் C) தரங்கம்பாடி D) மசூலிப்பட்டினம்

**162)** “இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே” என கூரியவர்?

A) ஹரிதாசர் B) துக்காராம் C) ராமானுஜர் D) ஆதிசங்கரர்

**163)** துவக்கத்தில் விஷ்ணு சித்தர் என அறியப்பட்ட ஆழ்வார்?

A) நம்மாழ்வார் B) பெரியாழ்வார்
C) பூதத்தாழ்வார் D) பொய்கையாழ்வார்

**164)** பன்னிரு ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் என அழைக்கப்படுவோரில் சேராதவர்?

A) பொய்கையாழ்வார் B) பூதத்தாழ்வார் C) பெரியாழ்வார் D) பேயாழ்வார்

**165)** சைவத்திருமுறைகளுள் எத்தனை நூல்கள் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவையாகும்?

A) 10 B) 8 C) 12 D) 11

**166)** பொருந்தாத இணை எது?

A) ராமானுஜர் - வசிஷ்டாத்வைதம் B) சங்கரர் - அத்வைதம்
C) ராமானுஜர் - தென்கலை D) மேறகண்ட எதுவுமில்லை

**167)** கவிஞரும் இசைக்கலைஞரும், பார்வைத்திறன் அற்றவருமான ______ கோவர்தன் கோவிலோடும் ஆக்ராவிலுள்ள கோவிலோடும் தொடர்புடையவராவார்.

A) அல்பெரூணி B) சூர்தாஸ் C) துக்காராம் D) அமீர்குஸ்ரு

**168)** ராமனின் கதையை "ராமசரிதமானஸ்" என்றத் தலைப்பில் இந்தி மொழியில் இயற்றியவர்?

A) வால்மீகி B) வியாசர் C) துளசிதாசர் D) ராம்தாஸ்

**169)** சூபியிஸம் சூபி எனும் சொல் ‘சுப்’ எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும். அதன் பொருள் ____ ஆகும்.

A) துறவி B) கம்பளி C) பற்றற்றது D) பற்றிக்கொள்

ETW ACADEMY

**170)** சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர்?

A) கவிஞர் இக்பால் B) சயது அகமது கான் C) மொய்னுதீன் D) அஜீம் தும்ஹல்

**171)** குருநானக், அவருக்குப் பின்வந்தோர் ஆகியோரின் போதனைகள் தொகுக்கப்பட்டு அது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) குரு கிரந்சாகிப் B) அலாய் தர்வாசா C) குருத்வாரா D) குப்லாய்கான்

**172)** இந்தியாவின் ஊட்டச்சத்து அடர்த்தி சதவீதம் எவ்வளவு?

A) 874 B) 645 C) 534 D) 753

**173)** ஐநா சபையின் கணிப்புப் படி, பிப் 19, 2019 அன்று இந்தியாவின் மக்கள் தொகை எவ்வளவு?

A) 1,263,431,725 B) 1,463,431,725 C) 1,663,431,725 D) 1,363,431,725

**174)** தற்பொழுது இந்தியாவில் மிகவும் அதிக கல்வியறிவு விகிதத்தை (94.65%) கொண்டுள்ள மாநிலம் எது?

A) மணிப்பூர் B) கேரளா C) மிசோரம் D) திரிபுரா

**175)** பிராமி எழுத்து வடிவில் எழுதப்படாத ஒரே திராவிட மொழி எது?

A) துளு B) கன்னடம் C) தமிழ் D) பிரஹி

**176)** தோடர்களின் குடியிருப்புகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) குண்ட் கட்டி B) செரிப்ஸ் C) முண்ட்ஸ் D) சிரப்ஸ்

**177)** தமிழகத்தின் மிகப்பெரிய பழங்குடியின மக்கள் யார்?

A) குரும்பர்கள் B) கோடாக்கள் C) படுகர்கள் D) இருளர்கள்

**178)** இந்தியாவுக்கான பொருளாதாரத் திட்டமிடலின் முன்னோடி என்று கருதப்படுபவர் யார்?

A) மஹலநோபிஸ் B) எம்.ஆர்.பண்டார்கர் C) எம்.விஸ்வேஸ்வரய்யா D) ஜே.சி.குமரப்பா

**179)** நிதி ஆயோக்கின் பணி எது (வை)?

I) கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி

II) நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க வைத்தல்

III) பரவலாக்கப்பட்ட திட்டமிடல்

A) I & II B) II & III

C) I & III D) மேற்கண்ட அனைத்தும்

**180)** 2017இல் பதினைந்தாவது நிதிக்குழு யாருடைய தலைமையில் ஏற்படுத்தப்பட்டது?

A) C. ரங்கராஜன் B) N. K. P. சால்வே C) N. K. சிங் D) Dr. Y. V ரெட்டி

**181)** வரிக்கு வரி எனபது?

A) செஸ் B) கூடுதல் கட்டணம்

C) ஜி.எஸ்.டி D) தண்டத்தொகை

ETW ACADEMY

**182)** பின்வருவனவற்றுள் மறைமுக வரி அல்லாதது எது?

A) உற்பத்தி வரி & கேளிக்கை வரி
B) விற்பனை வரி & சுங்கத்தீர்வை
C) சேவை வரி
D) நிறுவன வரி

**183)** இந்தியாவில் அனைத்து நுகர்வோரும் செலுத்தும் வரி எது?

A) நேர்முக வரி B) மறைமுக வரி C) சொத்து வரி D) வருமான வரி

**184)** பேரழிவு ஆபத்து குறைப்பை ஊக்குவிப்பதற்காக குறிப்பிட்ட செயல்பாட்டு வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் 2005 மற்றும் 2015க்கு இடைப்பட்ட பேரழிவு ஆபத்து குறைப்பு முயற்சிகளுக்கான உலகளாவிய வரைபடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) கியூகோ செயல்திட்ட வரைவு
B) நைட்ரோ செயல்திட்ட வரைவு
C) ஹைட்ரோ செயல்திட்ட வரைவு
D) ஹெர்குலீஸ் செயல்திட்ட வரைவு

**185)** தமிழ்நாட்டில் பெரும்பாலாக புயலால் பாதிக்கப்படும் கடலோர மாவட்டங்கள் எத்தனை?

A) 8 B) 13 C) 10 D) 6

**186)** இடிக்கும், மின்னலுக்கும் இடையே உள்ள இடைவெளியானது எத்தனை நொடிக்கும் குறைவாக இருந்தால் நீங்கள் ஆபத்தில் இருப்பதாக அர்த்தம்?

A) 3 B) 10 C) 30 D) 60

**187)** ரிச்சர்ட் ஒரு ஆடையை வாங்கும்போது 10% தள்ளுபடி கிடைத்தது. அதன் குறித்த விலை ₹5000. அவர் அந்த ஆடையை வாங்கிய விலையில் 10% விற்பனை வரி செலுத்தினால், அவர் அந்த ஆடையை என்ன விலைக்கு வாங்கி இருப்பார்?

A) ₹3850 B) ₹4020 C) ₹4750 D) ₹4950

**188)** மதிப்புக்கூட்டு வரியுடன் ஒரு சமையல் சாதனத்தின் விலை ₹19,610. அதன் மதிப்புக்கூட்டு வரி 6% எனில், அதன் அடக்க விலை எவ்வளவு?

A) ₹17,200 B) ₹17,700 C) ₹18,200 D) ₹18,500

**189)** ஒரு புத்தகத்தின் மீது அதன் விலை ₹450 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு புத்தகக்கண்காட்சியில் கடைக்காரர் அப்புத்தகத்தின் மீது 20% தள்ளுபடி கொடுக்கின்றார். அப்புத்தகத்தின் விற்பனை விலை என்ன?

A) ₹360 B) ₹380 C) ₹240 D) ₹220

**190)** ஒரு பொருளின் விற்பனை விலை ₹240. தள்ளுபடி ₹28 எனில், குறித்த விலை என்ன?

A) ₹212 B) ₹268 C) ₹228 D) ₹258

**191)** ஒரு புத்தகத்தின் விலையில் 10% தள்ளுபடி செய்தாலும் ஒரு வியாபாரிக்கு 10% லாபம் கிடைக்கின்றது. அப்புத்தகத்தின் குறித்த விலை ₹220 எனில், அதன் அடக்கவிலை யாது?

A) ₹150 B) ₹160 C) ₹170 D) ₹180

**192)** ஒரு கடைக்காரர் தன் வாடிக்கையாளர்களுக்கு 10% தள்ளுபடி தந்தும் 20% லாபம் அடைகின்றார். ஒரு பொருளின் உண்மை விலை ₹450 எனில், அப்பொருளின் குறித்த விலையை காண்க?

A) ₹550 B) ₹600 C) ₹625 D) ₹675

ETW ACADEMY

**193)** ஓர் அலமாரி 5% தள்ளுபடியில் ₹5225 -க்கு விற்கப்படுகின்றது. அதன் குறித்த விலையை காண்க?

A) ₹5500 B) ₹5550 C) ₹5600 D) ₹5675

**194)** ஒரு ஆடையின் பட்டியல் விலை ₹220 அதன் விற்பனையில் 20% தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விற்பனை விலை என்ன?

A) ₹156 B) ₹166 C) ₹176 D) ₹186

**195)** அன்பரசன் ஒரு வீட்டை ₹17,75,000-க்கு வாங்கினார். பின்பு உட்புறங்களை ₹1,25,000-க்கு அழகுபடுத்தி அதை 20% லாபத்தில் விற்றார் எனில், விற்பனை விலையை காண்க?

A) ₹22,00,000 B) ₹22,20,000 C) ₹22,40,000 D) ₹22,80,000

**196)** வியாபாரி ஒருவர் ₹1320-க்கு ஒரு மேஜையை 10% லாபத்தில் விற்றார் எனில், அதன் அடக்க விலையை காண்க?

A) ₹1000 B) ₹1100 C) ₹1200 D) ₹1400

**197)** 16 நோட்டுப் புத்தகங்களின் அடக்க விலை, 12 நோட்டுப் புத்தகங்களின் விற்பனை விலைக்குச் சமம். இதன் லாப சதவீதத்தைக் காண்க?

A) 10 1/3 % B) 33 1/3 % C) 63 1/3 % D) 30%

**198)** ஒரு ஸ்கூட்டியை ₹13,600-க்கு விற்பனை செய்யும் போது 15% நஷ்டம் ஏற்படுகிறது எனில், அதன் அடக்க விலை என்ன?

A) ₹14000 B) ₹15000 C) ₹16000 D) ₹17000

**199)** ஹமீது ஒரு வண்ண தொலைக்காட்சிப் பெட்டியை ₹15200-க்கு வாங்கி, 20% நஷ்டத்திற்கு விற்றார். எனில், அத்தொலைக்காட்சிப் பெட்டியின் விற்பனை விலை என்ன?

A) ₹12000 B) ₹12160 C) ₹12170 D) ₹12180

**200)** சோபா செட் ஒன்றின் விற்பனை விலை ₹7000, அதனுடைய லாபம் 12 1/2% எனில், அடக்க விலையை காண்க?

A) ₹6000 B) ₹6132 C) ₹6222 D) ₹6432

***

© ETW Academy

ETW ACADEMY